

புதுக்கோட்டை மாநகராட்சி, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தும், மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் 23.08.2025 அன்று துவக்கி வைத்து, அரங்குகளை பார்வையிட்டார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மோ.மணிகண்டன், பெ.வேல்முருகன் (தொ.வ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கோவை மாநகராட்சி, ஆர்.எஸ்.புரம் மாதிரி பள்ளியில் ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதி மற்றும் ரூ.1.96 மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வகுப்பறைகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாவட்டச் செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன், நா.கார்த்திக், கே.ஈஸ்வரசாமி எம்.பி., மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் வெற்றிசெல்வன், ஆர்.எஸ்.புரம் பகுதி பொறுப்பாளர் கார்த்திக்செல்வராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட நகராட்சி நிர்வாக இயக்குனர், மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையாளர், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## போலியோவை வெல்ல – கலைஞரின் அரசும், ரோட்டரி சங்கமுமே காரணம்!

# ரோட்டரி சங்கத்தின் பணிகள் மென்மேலும் சிறக்க ‘திராவிட மாடல்’ அரசு துணை நிற்கும்!

## சென்னையில், ரோட்டரி இந்தியா லீடர்ஷிப் மாநாட்டில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை

**சென்னை, ஆக. 26-**

**போலியோவை வெல்ல, கலைஞரின் அரசும், ரோட்டரி சங்கமுமே காரணம் என்றும், ரோட்டரி சங்கத்தின் பணிகள் மென்மேலும் சிறக்க திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்றும் சென்னை ரோட்டரி இந்தியா லீடர்ஷிப் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எங்கள் திராவிட நிலத்துக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். ``லீட் 25: எய்ம் ஹை - ரோட்டரி இந்தியா லீடர்ஷிப் மாநாட்டில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. சிறு வயது முதலே ரோட்டரி சங்கத்தின் சேவைகளை, நான் பார்த்து வியந்திருக்கிறேன்.

மக்கள் நலனுக்காக தொடர்ந்து பல ஆண்டுகளாக சமூக சேவையில் ஈடுபடுவது எளிதான காரியமல்ல. அதற்காக ரோட்டரி சங்கத்திற்கும் அதன் நிர்வாகிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 100 பிங்க் ஆட்டோக்கள்

இங்கு ரூ.250 கோடி மதிப்பிலான சமூக நலத்திட்டங்களை, ரோட்டரி சங்கம் தொடங்கி வைப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மகளிருக்காக 100 பிங்க் ஆட்டோக்களை வழங்கியிருக்கிறோம். இது மகளிர் முன்னேற்றத்திற்கான சிறந்ததொரு முன்னுதாரணம்.

மேலும் 250 புதிய ரோட்டரி சங்கங்கள் தொடங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சாதனை மட்டுமல்ல சமூக முன்னேற்றத்தில் ரோட்டரி சங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது. இதற்காக ரோட்டரி சங்கத்திற்கு எனது வாழ்த்துகள்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 23.8.2025 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற ரோட்டரி இந்தியா தலைமைத்துவ மாநாட்டில், ரோட்டரி சங்கத்தின் சார்பில் 100 பெண்களுக்கு இளஞ்சிகப்பு நிற (பிங்க்) ஆட்டோக்களை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சாவதேச ரோட்டரி தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, ஏகேஎஸ் ரோட்டரியன்கள் எம். முருகானந்தம், வினோத் சரோகி, ஃப்ளைட் லெப்டினன்ட் கே.பி. நாகேஷ், ரோ.சிவா இளங்கோவன் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இந்த மண்டபத்தில் 10,000-க்கும் மேற்பட்டோர் உற்சாகத்துடன் கூடியிருப்பதைப் பார்க்கிறேன். உங்களுக்குள் உள்ள சேவை மனப்பான்மையையும், ஈடுபாட்டையும் என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. ரோட்டரி சங்கத்தையும், அதன் உறுப்பினர்களின் சமூக சேவைகளையும் போற்றுகிறேன்.

கல்வி, சுகாதாரம், சமூக முன்னேற்றம், சுற்றுச்சூழல் என பல துறைகளில் ரோட்டரி சங்கம் ஆற்றும் பணிகள் பலரின் வாழ்வை மாற்றுகின்றன. ரோட்டரி சங்கத்தின் சர்வதேச மாநாடு `நம்ம சென்னை' யில் நடைபெறுவது சிறப்பு வாய்ந்தது. உலகத் தரத்திலான இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த அமைப்பாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மறக்க முடியாது

1905- இல் சிகாகோவில் தொடங்கப்பட்ட ரோட்டரி சங்கம் இன்று 220 நாடுகளில் 14 லட்சம் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் போலியோ ஒழிப்பில், ரோட்டரி சங்கம் ஆற்றிய பங்கை யாராலும்மறக்கமுடியாது. போலியோ தடுப்பில் ரோட்டரி சங்கத்தின் பங்கு அளப்பரியது.

ரோட்டரி சங்கம் 1980-களிலிருந்து, 2.7 பில்லியன் அமெரிக்க டாலரை ஒதுக்கி, லட்சக்கணக்கான மணிநேரங்களை போலியோ தடுப்பிற்காகவே செலவிட்டுள்ளது. உலக நாடுகளில் இருந்து போலியோ நோயை 99.9% குறைக்க, ரோட்டரி சங்கம் முக்கியமான காரணமாக இருந்துள்ளது. ரோட்டரி சங்கத்தின் பங்களிப்பு இல்லாமல் போலியோவிலிருந்து இந்தியாவால் விடுபட்டிருக்க முடியாது.

### முழுப்பெருமை சேரும்

1990-களில் போலியோ ஒழிப்பு இயக்கம் தொடங்கிய போது, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு, ரோட்டரி சங்கத்துடன் இணைந்து போலியோ சொட்டு மருந்து முகாம்களை நடத்தியது. அதனால் தான் இந்தியாவில் போலியோவை வென்ற முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. கலைஞரின் அரசுக்கும், ரோட்டரி சங்கத்திற்குமே அந்த முழுப் பெருமை சேரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலேயே இன்று நம் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், ரோட்டரியுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறார்கள். புயல், மழை, வெள்ளம் போன்ற பேரிடர் நேரங்களிலும் மக்களைக் காக்க ரோட்டரி சங்கம் முன் வரிசையில் நின்று பணியாற்றி வருகிறது. அதற்கும் என் பாராட்டுகள்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ரோட்டரி சங்கம் வழங்கிய மருத்துவ உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கியதுடன், அரசுக்கும் முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. தனிப்பட்ட முறையில் நானும் அப்போது ரோட்டரி சங்கத்துடன் இணைந்து பணியாற்றினேன். மேலும் தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த பள்ளிகளுக்குத் தேவையான உதவிகளையும் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளையும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

### திராவிட மாடல் அரசு!

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் தொடங்கப்பட்ட நீரிழிவு மையங்கள், ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் பயனளித்தன. அவர்களுக்கு ரோட்டரி சங்கம் சேவை அமைப்பு மட்டும் இல்லாமல் உயிர் காக்கும் அமைப்பாகவும் இருந்தது. என் சகோதரர் முருகானந்தம் அவர்கள், தமிழ்நாடு அரசுடன் இணைந்து செய்ய வேண்டிய சில முக்கியமான யோசனைகளைப் பகிர்ந்துள்ளார்.

### அவை

1.நம்ம பள்ளி - நம்ம ஊரு பள்ளி” திட்டத்துடன் ரோட்டரி சங்கம் இணைந்து செயல்படுவது,

2.மகளிரின் உடல் நலனுக்காக கருப்பை புற்றுநோய் தடுப்பு முகாம்,

3.சிறந்த ரோட்டரி சங்க உறுப்பினருக்கு மாநில அளவிலான சமூக சேவை விருதுகள் வழங்குவது.

சமூக நலனில் அக்கறை கொண்ட நம் திராவிட மாடல் அரசு இவற்றை கவனமாகப் பரிசீலித்து, இவற்றை நடைமுறைப்படுத்தும் வழிகளை ஆராயும் என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, விளையாட்டு மேம்பாட்டில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. விளையாட்டின் மூலம் இளைஞர்கள் வாழ்வை மேம்படுத்துவதில், ரோட்டரி சங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு எங்களுக்கும் விருப்பமே.

### தலைமைத்துவம்

லீட்-25 போன்ற சந்திப்புகள் உண்மையான தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தலைமைத்துவம் என்பது வெறும் அதிகாரம், பதவியை மட்டும் கொண்டிருப்பதல்ல. அது சேவை, தியாகம், பொறுப்பையும் ஏற்று செயல்படுவதாகும்.

நமது திராவிட மாடல் அரசும் அதே விழுமியங்களை கைக்கொண்டு, சமூக நீதி மற்றும் பாலின சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை நோக்கிப் பயணித்து வருகிறது என்பதை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரோட்டரி சங்கத்துடன் இணைந்து செயல்படுவதால், சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை நம்மால் ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் தொலைநோக்குப் பார்வையால் நமது சமூகம் அடைந்த முன்னேற்றத்தைக் குறித்து அறிந்து கொள்ள இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் உங்கள் அனைவரையும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். ரோட்டரி சங்கத்தின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும். இந்த மாநாடு சிறப்பாக அமையட்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இந்நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சர்வதேச ரோட்டரி சங்கத் தலைவர் பிரான்சிகோ அரெஸ்ஸோ, ரோட்டரி சங்க தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம், இணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.நாகேஷ், லீட்ஸ்- 25 மாநாட்டின் தலைவர் ஜான் டேனியல், மாநாட்டின் செயலாளர் குமரன், சந்திரகுமார், ரகுராமன், கல்யாண் பானர்ஜி, பள்ளிக்கல்வி இயக்குநர் கண்ணப்பன், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலாளர் சுதன், சார்ல்ஸ் ஃபவுண்டேஷன் இயக்குநர் சார்ல்ஸ் மார்டின் மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து திரண்டுள்ள ரோட்டரி சங்க உறுப்பினர்கள், தி.மு.கழகத்தின் நிர்வாகிகள் முத்துகுமார், பி.கே. பாபு உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை -

# தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் ஹைட்ரோ - கார்பன் திட்டங்களுக்கு அனுமதி வழங்காது!

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

**சென்னை, ஆக.26-**

**“சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கான அனுமதியினை தமிழ்நாடு அரசு வழங்காது” என, அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் தங்கம் தென்னரசுவின் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு, கடந்த 20.02.2020 அன்று தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல



(Protected Agricultural Zone - PAZ) சட்டம், 2020ஐ இயற்றியதன் மூலம் காவிரி டெல்டா பகுதியினை , பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்தது. இச்சட்டத்தின் அடிப்படையில், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகள் ஆகிய டெல்டா பகுதிகளில் புதிதாக எரிபொருள், இயற்கை வாயு, நிலக்கரி மீத்தேன் மற்றும் ஷேல் வாயு போன்றவற்றின் இருப்பு குறித்த ஆராய்ச்சி, மற்றும் அகழ்வுத் தொழில்கள் ஆகியவை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. மேலும், கடந்த 2023 ஆம் ஆண்டு இத்தடை மயிலாடுதுறை மாவட்டத்துக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இதற்கிடையில், M/s. Oil and Natural Gas Corporation Ltd., (ONGC) நிறுவனமானது, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோகார்பன் இருப்பு குறித்து ஆய்வு செய்ய விண்ணப்பித்திருந்ததை தொடர்ந்து, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Environment Impact Assessment Authority - SEIAA) M/s. Oil and Natural Gas Corporation Ltd., (ONGC) க்கு சுற்றுச்சூழல் அனுமதியினை நேரடியாக வழங்கியுள்ள செய்தி தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இதனை அடுத்து ONGC நிறு வனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியினை உடனே திரும்பப் பெறுமாறு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைத்திற்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியிலும், ஹைட்ரோகார்பன் தொடர்பான எந்த ஒரு திட்டத்தையும் அனுமதிக்க முடியாது என்பதே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திடமான கொள்கை முடிவாகும். எனவே, தற்போது மட்டுமின்றி எதிர்காலத்திலும் நம் மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் இத்திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.